பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

S. M. FERNANDO
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

# உதயன்

விலை
ரூபா
5-00

கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி.
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 01 ஞாயிற்றுக்கிழமை (14-03-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 107

# பம்பாய் குண்டு வெடிப்புகள் தொடர்பாக இலங்கை பிரசை ஒருவர் விசாரணையில்!

## விடுதலைப் புலிகளின் சம்பந்தம் குறித்தும் ஆராயப்படுகிறதாம்

லண்டன், மார்ச் 14

பம்பாய் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பயங்கரக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் சம்பந்தமாக இலங்கையைச் சேர்ந்த ஒருவரை பம்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து பி.பி.ஸி செய்தியாளர் ஒருவர், பம்பாய் கூட்டு பொலிஸ் கமிஷனர் எம். என். சிங்கை நேற்று பேட்டி கண்டார்.

பி. பி. ஸி. செய்தியாளருக்கு தகவல் வழங்கியபோது பொலிஸ் கமிஷனர் தெரிவித்த தாவது:-

கேள்வி: இக்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக எவரையேனும் கைது செய்து காவலில் வைத்திருக்கிறீர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு யோசனையை ஏற்று

# வடக்கு-கிழக்கைப் பிரித்தால் யுத்தம் மேலும் தீவிரமடையும்

## உயிர், உடைமைச் சேதங்கள் பெருகும் என்றும் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 14

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்துள்ள யோசனையை ஏற்று, அரசாங்கம் வடக்கு - கிழக்கைப் பிரிக்குமானால், இப்போது நடைபெறும் போர் மேலும் தீவிரமடையும். அதன் பயனாக உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் பெருகும் என்று பி. பி. ஸி வானொலி தனது கண்ணோட்டம் ஒன்றில் எச்சரித்திருக்கிறது.

இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையைத் தொடர்ந்து இலங்கையில் எழுந்துள்ள அரசியல் நிலை குறித்து பி. பி. ஸி விமர்சனக் கண்ணோட்டம் ஒன்றை ஒலி பரப்பியது.

அந்தக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:-

தெரிவுக் குழுவில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் தனியாக ஓர் அறிக்கையைத் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைகளைத் திருத்தி வரையறுத்து சிறிய அளவிலான வடக்கு-கிழக்கு?

கொழும்பு, மார்ச் 14

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் யோசனையைத் தமிழர் தரப்பு நிராகரித்து விட்டதால், வடக்கு - கிழக்கு மாகாண எல்லைகளை திருத்தி வரையறுப்பது சம்பந்தமான ஒரு மாற்று யோசனையை ஜனாதிபதி பிரேமதாசா பரிசீலனை செய்வாரா?

இவ்வாறு ஒரு புதிய கேள்வியை முன்வைத்திருக்கிறார் பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஷியாக்கா நூஸ்.

அவர் தமது விமர்சனக் குறிப்பொன்றில் மேலும் தெரிவித்திருப்பதாவது;-

மாகாண எல்லைகளை மீண்டும் திருத்தி வரையறுப்பதன் மூலம் இப்போது உள்ளதைவிட சிறிய வடக்கு-கிழக்கு மாகாணத்தை உருவாக்கலாம். அதன் மூலம் இரு பகுதிகளையும் இணைக்க வேண்டும் என்ற தமிழர்களையும் ஓரளவு திருப்திப் படுத்தலாம்.

சிங்களவர்களும், முஸ்லிம்களும் அதிகமாக வாழும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரப்பகுதிகள் மீது கடற்படையினர் தாக்குதல்

குருநகர், மார்ச் 14

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் யாழ். குடாக் கடல் முகத்துவாரத்திற்கு தெற்கே மண்டை தீவுக்கு இடைப்பட்ட "கெளுத்துப் பிட்டி" என்று மீனவர்களால் அழைக்கப்படும் பகுதிக்கு திடீரென ரோந்துப் படகில் வந்து சேர்ந்த கடற்படையினர் அங்கிருந்து பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

பீரங்கிக் குண்டுகள் அரியாலை கிழக்கு, கொழும்புத் துறைக் கரையோரக் கடல் பிரதேசத்தில் விழுந்து வெடித்ததை அடுத்து கடற்றொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்கள் அவசர அவசரமாகக் கரை வந்து சேர்ந்தனர்.

கால்மணி நேரம் விட்டு விட்டுப் பீரங்கிக் குண்டுகளை ஏவிய கடற்படையினர் பின்னர் அங்கிருந்து அகன்று சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-15-17-51)

## பல நாட்டுத் தூதர்கள் வலியுறுத்து

## குடாநாட்டுக்கான பாதை; திறக்க நடவடிக்கை எடுக்குக!

### செஞ்சிலுவையிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 14

யாழ். குடாநாட்டுக்குள் மக்களும் அத்தியாவசிய பொருள்களை எடுத்து செல்லும் வாகனங்களும் சுதந்திரமாகச் சென்று வருவதற்கு பாதுகாப்பானபாதை ஒன்றை திறக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் எடுக்க வேண்டும்.

கொழும்பில் உள்ள அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலிய தூதர்களும்— நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயமும், ஐரோப்பிய சமூகமும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளன

கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (த-எ)

## அவசரகாலச் சட்டத்தை அரசு மீண்டும் பரிசீலிக்குமாம்

### ஐ. நாவுக்கு உறுதி அளித்தது

கொழும்பு, மார்ச் 14

அவசரகாலச் சட்டத்தை மற்றுமொரு முறை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய உள்ளது.

இது சம்பந்தமாக அரசாங்கம் ஐ. நாவுக்கு வாக்குறுதி அளித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் கடந்த பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் அவசரகாலச் சட்ட விதிகள் சிலவற்றைத் தளர்த்தியிருந்தது தெரிந்ததே.

ஜெனிவாவில் கடந்த மாத இறுதியில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் அரசின் மீது தெரிவிக்கப்படக்கூடிய குற்றச்சாட்டுகளில் இருந்து தப்புவதற்கு முன் ஏற்பாடாகவே அரசு அவசரகாலச் சட்ட விதிகளை நீக்கி இருந்தது.

அதற்கு மேலதிகமாக அவசரகாலச் சட்டத்தை மீள்பரிசீலனை செய்வதற்குஇப்போது ஸ்ரீலங்கா அரசு குறிப்பிட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பம்பாய் அனர்த்தங்கள்

## பலியானோர் எண்ணிக்கை 273 ஆக உயர்ந்தது

பம்பாய், மார்ச் 14

பம்பாயில் இடம்பெற்ற பயங்கர குண்டுவெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 273 ஆக உயர்ந்துள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன

அதேசமயம் உயிரிழந்தவர்களில் எண்ணிக்கை 225 ஆக அதிகரித்திருப்பதாக இந்திய வானொலி தெரிவித்தது.

படுகாயமடைந்த பலர் இன்னும் ஆபத்தான கட்டத்தை தாண்டாத நிலையில் இருந்து வருவதாகவும், இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## இந்தியா முழுவதிலும் தீவிரமான பாதுகாப்பு!

புதுடில்லி, மார்ச் 14

பம்பாய் சம்பவங்களை அடுத்து இந்தியாவின் முக்கிய நகரங்கள் எங்கும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுடில்லியில் உள்ள தூதரகங்கள் மற்றும் கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களில் ஆயுதப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தூதரகங்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் எனக் கருதி, அங்கு பாதுகாப்பு இருமடங்காக்கப்பட்டுள்ளது

இதேவேளை தமிழ் நாட்டிலும் காவல்துறையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், முக்கிய பேருந்து நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ)

## வெடித்தவை அனைத்தும் 'பிளாஸ்ரிக்' குண்டுகள்!

புதுடில்லி, மார்ச் 14

பம்பாயில் நேற்று முன்தினம் வெடிக்கவைக்கப்பட்ட குண்டுகள் அனைத்தும் "பிளாஸ்ரிக்" குண்டுகள் என்று புதுடில்லியில் இருந்து வெளிவரும் 'பயனியர்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

குண்டு வெடித்த இடம் ஒன்றிற்கு அருகில் கைவிடப்பட்டிருந்த மாருதி கார் ஒன்றில் இருந்து ஏ. கே. 47 ரைபிள்கள், 700 பாவிக்கப்படாத ரவைகள், கிரனேட்டுகள் சிலவும் ஏனைய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்று 'பேட்ரியட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

குண்டு வெடித்த ஹோட்டல் ஒன்றினுள் "பிரீவ்கேஸ்டன்" ஒருவர் சென்று அறை ஒன்றை வாடகைக்கு எடுத்தார் என்றும்—

அந்த நபர் ஹோட்டலை விட்டு வெளியேறிய பின்னர் அந்த ஹோட்டலில் குண்டு வெடித்தது என்றும் "டைம்ஸ் ஒவ் இந்தியா" செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஒ-ா)

## தகவல் தருபவர்களுக்கு ரூ. 10லட்சம் சன்மானம்

பம்பாய், மார்ச் 14

பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குக் காரணமான அமைப்புக்கள் அல்லது தனிநபர்கள் குறித்து உண்மையான தகவல்கள் தருபவர்களுக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும்.

மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் சரத்பவார் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

இதனிடையில் —

குண்டுவெடிப்புச் சம்பவங்களின் எதிரொலியாக மாநிலத்தில் குறிப்பிடத்தக்க வன்செயல்கள் ஏதும் நிகழவில்லை என்று பம்பாய் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

## சர்வதேச பொலீஸார் விசாரணை நடத்துவர்!

பம்பாய், மார்ச் 14

பம்பாயில் அப்பாவி பொதுமக்கள் பலர் கொல்லப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு காரணமான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க "இன்டர் போல்" எனப்படும் சர்வதேச பொலிஸ் நிறுவனத்தின் உதவியை மத்திய அரசு நாட இருப்பதாக முதலமைச்சர் சரத் பவார் அறிவித்தார்

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.பி.ஐ) விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

மாநில அரசின் விசாரணைகளுக்கு மத்திய அரசு தன்னாலான முழுஒத்துழைப்பையும் வழங்கும் என்று உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று பம்பாயில் வைத்து தெரிவித்தார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய உயர்இன கறுப்பு அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை, (மக்ட் றவல் லேன்) பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். (24836)

திருநெல்வேலியில் மூன்று பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. செல்வரத்தினம், புதிய இல. 183, நாவலர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (24835)

புத்தம் புதிய Rs - 110 Eletric Guitar, PSS-270 Organ விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 123, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (24837)

அடை வைப்பதற்கு ஏற்ற வெள்ளடியான், கழுத்து வெட்டியான், கலப்பு இன கோழி முட்டைகள் விற்பனைக்குண்டு. தொகையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மு. புவனேந்திரன், சமரபாகு தேவன் குறிச்சி, உடுப்பிட்டி. (24660)

### வீடு விற்பனைக்கு

மாநகரசபை எல்லைக்குள் இரண்டரைப் பரப்பு காணியுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. Power of Attorney இருக்கிறது. பிற்பகல் 2-00 மணிக்கு பின் நேரில் பார்வையிடலாம். தரகர் இல்லை. திருமதி விஜயந்தினி அமிர்தலிங்கம், இல. 156/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (2483?)

### விற்பனையாகின்றன

எம்மிடம் தெய்வீக நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் ஆகியன விற்பனையாகின்றன. சோதிட விலாசபுத்தகசாலை, 46, பெரிய கடை, யாழ்ப்பாணம், சோதிட பிரகாச இயந்திரசாலை, கொக்குவில். (6049)

### தேவை

ஊசல் வேலையில் அனுபவமுள்ள மெக்கானிக் தேவை. தொடர்பு: சிவலிங்கம் மோட்டோஸ், இல. 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6050)

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்த Computer நிறுவனம் ஒன்றிற்கு Computer Instructor தேவை. தொடர்பு: இல. 891, மே/பா உதயன். (சி 4711)

### மணமகள் தேவை

33 வயது, அசுவனி நட்சத்திரம், 7இல் செவ்வாய் உள்ள அரசாங்க தொழில் புரிபவருக்கு 25 - 30 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 506, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (24846)

### திருத்த வேலைகள்

சுடுகாரங்கள் திருத்துதல் வேலைகள் உத்தரவாதத்துடன் தொடர்ச்சியாக மேற்கொள்கிறோம். [illegible] (சி-4712)

### இலவச திருமண சேவை

50 வயது [illegible] தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. [illegible] யாழ் நாச்சிமார் கோவிலடி. (21815)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாக செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (24803)

---

# எமது வரலாற்றுப் பெருமையை மாணவருக்கு கற்பிக்க வேண்டும்

## வித்தியாலய பவளவிழாவில் பேராசிரியர்

உரும்பராய், மார்ச் 14

''இலங்கையில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க தமிழரான சேர். பொன். அருணாசலம் காரணமாக இருந்தார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கணிதத்துறை உரும்பராய் மண்ணில் உதித்த பேராசிரியர் திரு. சி. சுந்தரலிங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் பதில் தேசாதிபதியாக இருந்த முதலாவது இலங்கையர் உரும்பராயின் திரு. சி. நாகலிங்கம் ஆவார். இத்தகைய எமது வரலாற்றுப் பெருமையை நாம் மாணவருக்குக் கற்பிக்க வேண்டும்.''

அண்மையில் நடைபெற்ற உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பவள விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பவள விழா மலர் பற்றி விமர்சன உரை நிகழ்த்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் செல்வி அ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மருதனார் மடம் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. கோணந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

விழாவில் தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில்— ''தமிழரின் தாயகம் மட்டுமல்ல, கல்வியும் எதிரியால் அழிக்கப்பட்டு வருகிறது. எமது வருங்காலச் சந்ததி சிறப்பாக வாழக் கல்வி முக்கியமானது. எமது கல்வியைச் சீர்குலைக்க இலங்கை அரசு நீண்டகாலமாகத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது'' என்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ''எமது தலைவர் பிரபாகரன் எமது மாணவர்களின் கல்வியிலும் மிகவும் அக்கறையாக உள்ளார்'' என்று கூறினார்.

பேராசிரியர் வ. ஆறுமுகம் தொடக்க உரை நிகழ்த்துகையில் ''கற்பிப்பது மட்டும் எமது கடமை அல்ல. சமூக அமைப்புகள் மூலமாகவும் சமூகங்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். கல்விக் கூடங்களை வளர்க்கும் சமூகத்தையும் நாம் முன்னேற்ற வேண்டும்'' என்று கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் இந்நிகழ்ச்சியின் போது ஆசியுரை நிகழ்த்தினார்.

மார்ச் 5, 6, 7ஆம் திகதிகளில் 3 நாட்கள் நடைபெற்ற பவள விழா 5ஆம் திகதி கல்விக் கண்காட்சியுடன் ஆரம்பமாகியது. இறுதி நாளில் நாடகம், நடனம், இசைக் கச்சேரி, ஆங்கில நாடகம் ஆகியன இடம்பெற்றன. (க-154)

---

# மொடேர்ண் எடியுக்கேஷன் சென்ரர்

நெல்லியடி

## G.C.E. O/L DAY CLASS

**ஆரம்பம்: 16 - 03 - 1993**

| | | |
|---|---|---|
| ஆங்கிலம்: | காலை | 8-00 — 9-00 |
| தமிழ்: | காலை | 9-00 — 10-00 |
| கணிதம்: | காலை | 10-00 — 11-00 |

- நிர்வாகி.

(சி-4665)

---

சில்லாலை

# அத்தனாசியார் பிரதம வைத்தியசாலை

**14 — 03 — 1993 தொடக்கம்**

இடம்: 124, ஆடியபாதம் வீதி, நல்லூர்,
(கல்வியங்காடு சந்தியிலிருந்து 100 மீற்றர்)
S சுப்பிரமணியம் கொம்பனி முன்பாக)

சிகிச்சை நேரம்:
காலை 7-00 மணி — 1-00 மணி
பி. ப. 3-30 மணி — 6-00 மணி
(ஞாயிறு பிற்பகல் லீவு நாள்)

வைத்திய கலாநிதி,
எமில் அத்தனாசியார்.

(6051)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 21 — 06 — 1924

மறைவு: 12 — 02 — 1993

## அமரர் செல்லப்பா பஞ்சரத்தினம்

இதயத்தின் கனவுகளைக் கானலாக்கி
ஒகவாழ்வின் ஒளிதன்னை இருளுமாக்கி
மலர்போலுன் பேரமுகைலைகளிலிருந்து மறைவுமாகி
மனையாளின் மனத்திரையில் நிழலுருவமானாய்
பாசத்தில் உனக்கு நிகர் நீயே ஆனாய்
பண்புதனில் உறைவிடமாய் உயர்ந்து நின்றாய்
அப்பா உங்கள் கற்பனைகளை கணப் பொழுதில்
இடிந்தது யமனின் கொடுமையல்லவா?
வாழ்க்கையே தேடல்கள் தான் அப்பா
நாங்களே உங்களை மறக்க முடியாமல் வாழ்கிறோம்
காற்றினில் ஆயிரம் கண்ணீர் துளிகளை
காணிக்கை ஆக்குகிறோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், உதவி புரிந்தவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று 14 - 03 - 93 காலை 10-00 மணி தொடக்கம் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

ஞானவைரவர் வீதி,
கொண்டாவில் கிழக்கு.

(248??)

---

## சிறுபோக பயிர்ச் செய்கைக்கு:

# யாழ். விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய், உரம்

வலிகாமம் மேற்கு, மார்ச் 14

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு சிறுபோக பயிர்ச்செய்கை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் உரம், மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் பிரதேச செயலகங்கள் மேற்கொண்டுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள 10 பிரதேச செயலகங்களுக்கு ஆயிரத்து 800 பைக்கற் அமோனியம், ஆயிரத்து 800 பைக்கற் ரீ. டீ. எம். ஆகிய உரங்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு அமோனியா ஒரு அந்தர் 650 ரூபாவுக்கும், ரீ. டீ. எம். ஒரு அந்தர் 705 ரூபாவுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

பிரதேச செயலகங்கள் அந்தந்தப் பிரிவிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் உரத்தை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளன. (ஒ-175)

## குறைந்த விலையில் விதை தானியம்

கொடிகாமம், மார்ச் 14

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கொடிகாமத்தில் குறைந்த விலையில் விதை தானியங்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க-சி)

---

## ஐங்கரன் விளையாட்டுக் கழகம்

ராசி சில்க்ஸ், மதுரா சில்க்ஸ் ஆதரவில் நடத்தும் சுற்றுப் போட்டி

★ கிரிக்கெட் (மென்பந்து) 11பேர் கொண்ட 20 ஓவர்
★ கரப்பந்தாட்டம் (SET-UP) லீக் முறையில்

பிரவேசக் கட்டணம் ரூபா 50/- மட்டும்
விண்ணப்ப முடிவு திகதி: **31 — 03 — 1993**

விண்ணப்பப் பத்திரம் கிடைக்கும் இடங்கள்:

| | |
|---|---|
| ராசி சில்க்ஸ்- ஆடையகம், 70, 71A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம் | ஐங்கரன் - விளையாட்டுக் கழகம், 50/5, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். |

(சி-4677)

---

மாபெரும்

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி

**இன்று — 14-03 1993**

கோப்பாய் வடக்கு கோல்ட் ஸ்ரார் விளையாட்டு கழக நிதிக்காக

நீர்வேலி கண்ணாடி தொழிலகத்துக்கு அருகில் பிற்பகல் 2-00 மணிக்கு சவாரி நடைபெறும்

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் சவாரி மைதானத்திற்கு சமுகம் தரவும்

பார்வையாளர் பிரவேசம்:- 10/- மட்டுமே

கழக நிர்வாகம்

(2484?)

---

# நாய்களுக்கு தடுப்பூசி மருந்து

யாழ்ப்பாணம், மார்ச் 14

நான்கு மாதத்திற்கு மேற்பட்ட நாய்களுக்கு புதன்கிழமைகளில் காலை 8-30 மணி முதல் 11 மணிவரை விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்து நாவலர் வீதியில் — பிறவுண் வீதி சந்திக்கு அண்மையில் உள்ள — அரச கால்நடை வைத்தியசாலையில் போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-162)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 1897 — 12 — 12

உதிர்வு: 1993 — 02 — 13

## அமரர் முத்து வேலுப்பிள்ளை

அன்புக் கோயில் அப்பாவே!

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் நிறைவுற்றது. உங்கள் நினைவு எம் நெஞ்சங்களைவிட்டு என்றும் அகலாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனிடம் கண்ணீர் மல்கிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறைபடி சேர்ந்த தினமாகிய 13 - 02 - 93 இல் இருந்து இறுதிக் கிரியை 18 - 02 - 93 வரை கூட இருந்து ஆறுதல் கூறி உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஒத்தாசைகள் நல்கி உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது தந்தையின் மரணச் செய்தியை கொழும்புக்கு அனுப்பி பரிவர்த்தனை செய்த யாழ்ப்பாணம், கோவில் வீதியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் எமது இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

நாளை (15 - 03 - 93) அல்வாய் வடக்கு, பெரிய தம்பிரான் ஆலயத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் நண்பகலில் வீட்டில் நடைபெறும் சபிண்டீகரணத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

வே. சிவரத்தினம் (மகன்),
பெண் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

(சி-4679)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 08 — 09 — 1939

மறைவு: 13 — 02 — 1993

## திருமதி கனகரட்ணம் தங்கரட்ணம்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியையும், வீட்டுக் கிரியையும் நாளை 15 - 03 - 1993 இல் நடைபெறவிருப்பதால்; உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கணவர், பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு-
உலவிக்குறிப் பிள்ளையார் கோவிலடி,
அச்சுவேலி.

(6047)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### பம்பாய் குண்டு வெடிப்புகள்

இந்தியாவின் பிரசித்தி பெற்ற வர்த்தகக் கேந்திர நகரமான பம்பாயில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் உலகம் முழுவதையும் திகிலுறச் செய்துள்ளன. தொண்ணூறு நிமிட இடைவெளியில் பதின்மூன்று இடங்களில் அதிசக்தி வாய்ந்த நவீன குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததில் இருநூறுக்கும் அதிகமான மக்கள் அநியாயமாகப் பலியாகி விட்டனர். இத்தகு மனிதாபிமானமற்ற கொடுமை கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இந்தக் கொடூரம் மிகவும் நுட்பமாகவும், இணைந்த ரீதியில் திட்டமிடப்பட்டும் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்தப் பயங்கரத்துக்கு இந்து-முஸ்லிம் தகராறு பின்னணியாக இருக்க வாய்ப்புண்டு எனினும் இதில் ஒரு மாபெரும் நாசகார சக்தியின் கை பின்னுக்கு உள்ளது என்பதில் சந்தேகமில்லை.

அந்த நாசகார சக்தி உள்நாட்டைச் சேர்ந்ததா? வெளிநாட்டைச் சேர்ந்ததா என்பதை உடனடியாகச் சரியாக இனம் கண்டு கொள்வது இலகுவல்ல.

இந்தக் கொடூரக் குண்டு வெடிப்பில் வெளிநாட்டு சக்திகளுக்குப் பங்குண்டு என்று இந்திய அரச பேச்சாளர்கள் சொல்கிறார்கள்.

ஆனால் இந்தியாவில் நிலவும் உள்நாட்டுத் தகராறுகளும், உட்பூசல்களுமே இதற்கு அத்திவாரம் என்பதை மறைத்துவிட, மறந்துவிட முடியாது. இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் போர்வைக்கு கீழே மதப்பூசல்கள் எரிமலைகளாக சீறிக்கொண்டிருக்கின்றன.

அதில் ஒன்றே அயோத்தி விவகாரம். அதனை அரசியல் தலைமைத்துவங்கள் தக்கபடி கையாளாமல், எடுப்பார் கைப்பிள்ளை போல விளையாடிக் கொண்டிருப்பதன் விளைவே பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவம் என்று கூறலாம். பிரதமர் ராவ் அயோத்தி விவகாரத்தில் கண்டிப்பாக—வழுவல் நழுவல் இல்லாமல்— நடந்து கொண்டிருந்தால் நிலைமை இந்தளவுக்கு மோசமடைந்திருக்காது.

இந்தியாவின் சுதந்திரத்துக்குப் பின்னர், மதச்சார்பின்மை என்ற பெயரில் மதப் போட்டிகள் அடங்கிப் போயிருந்தன. அல்லது உள்ளுறைந்திருந்தன; இப்போது அவை முழக்கம் அதிகரித்து வெடிக்கத் தொடங்கியுள்ளன. இந்து அடிப்படைவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற தீவிரப் போக்குகளையும் எட்டியுள்ளன.

உலகில் உள்ள நாடுகள் பலவும் இப்போது மதச்சார்புடையனவாக மாறிக் கொண்டு வருகின்றன. அத்தகைய ஒரு சூழ்நிலையில் மதசார்பின்மை என்பது தாக்குப் பிடிக்குமா என்ற கேள்வி எழுகிறது.

வரலாற்று நகர்வில், உலகில் உள்ள பல தேசிய இனங்கள் தமக்கு விடுதலையும், தன்னாட்சியும் வேண்டும் என்று போராடும் ஒரு பின்னணி வளர்ந்து வருவதைக் காண்கிறோம். அதே போல நாடுகள் மதசார்புள்ளனவாக மாற வேண்டும் என்ற புதிய கோட்பாடு பலமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தற்கால இந்திய அரசியல் தலைவர்கள் தேசமக்கள் நலனை விட தமது சுயநலனிலேயே அக்கறை அதிகம் உள்ளவர்களாக இருப்பதால் மதச்சார்பின்மைக்கும் மதச்சார்புடைமைக்கும் இடையே ஏற்படக்கூடிய போட்டியில் சிக்குண்டு தவிக்கப்போகிறார்கள். உலகத்தின் பெரிய சனநாயக நாடு என்ற பதக்கத்தை அவர்கள் நீண்டகாலம் சூடிக்கொள்ள முடியுமா என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகிறது.

## பாடசாலைகளில்

சிறுப்பிட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் விநாயகமூர்த்தி தலைமையில் நாளை நடைபெறும். (க-110)

★ ★ ★

கரவெட்டி மேற்கு நாவலர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2-30 மணிக்கு அதிபர் திரு. வ. கோபாலகிருஷ்ணர் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கரவெட்டி கொத்தணி அதிபர் திரு. வ. செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் திரு. அ. க. கணேசனும் கலந்து கொள்வார்கள். (க-15)

★ ★ ★

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை திங்கட்கிழமை அதிபர் திரு. பு. கதிரித்தம்பி தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. எஸ், கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-11)

★ ★ ★

இணுவில் மத்திய கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு இணுவில் சைவப்பிரகாச வித்தியாலய விளையாட்டரங்கில் அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும்.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க 89)

★ ★ ★

புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த)

## கம்பன் கழக போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கம்பன் விழாவை முன்விட்டு அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய அமரர் வித்துவான் சி. ஆறுமுகம், அமரர் தேவன் யாழ்ப்பாணம் நினைவுக் கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு—

அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறும் கம்பன் விழாவின் போது பரிசுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கவிதைப் போட்டியில்—

செல்வி அருந்ததி வேலுப்பிள்ளை (பருத்தித்துறை முதலிடத்தையும், திரு த. சிவசங்கர் (யாழ். பல்கலைக்கழகம்) இரண்டாம் இடத்தையும், செல்வி பிரேமினி சபாரட்ணம் (சாவகச்சேரி இந்து) மூன்றாம் இடத்தையும்—

பேச்சுப் போட்டியில்—

திரு. த. நாகேஸ்வரன் (சாவகச்சேரி) முதலாம் இடத்தையும், செல்வி சாந்தினி சந்திரலிங்கம் (அச்சுவேலி) இரண்டாம் இடத்தையும், திரு. சி. நந்தகுமார் (யாழ்ப்பாணம்) மூன்றாம் இடத்தையும்— பெற்றுள்ளனர். (ஒ)

## பங்குனித் திங்கள் பொங்கல் விழா

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் பங்குனித் திங்கள் பொங்கல் விழா நாளையும் 15 ஆம், 22 ஆம், 29 ஆம் திகதிகளிலும் அடுத்த மாதம் 5 ஆம், 12 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

இவ்விழா சம்பந்தமான கூட்டம் ஒன்று கடந்த 6 ஆம் திகதி சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. எஸ் சுந்தரம்பிள்ளை தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது. (ஒ-க-18)

## இன்று

யாழ் பல்கலைக்கழக இந்து மன்றம் வழங்கும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "திரிசங்கு சொர்க்கம்" எனும் நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (அ-87)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் தலைவரும் சென். பத்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபருமான வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் பிற்கு பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் வழங்கும் பிரியாவிடை — மதிய போசன நிகழ்ச்சி இன்று நண்பகல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (உ)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் நடத்தி வரும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான விலகல் முறை உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெறும்.

மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் "பி" அணியை எதிர்த்து நாவாந்துறை சென் நிக்கிலஸ் "ஏ" அணி மோதும். தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் "ஏ" அணியை எதிர்த்து குருநகர் சென். றோக்ஸ் "ஏ" அணி மோதும். (உ)

## புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

லங்கா சித்த ஆயுள் வேதக் கல்லூரியின் புதிய அதிபராக வைத்திய கலாநிதி நா. வாமதேவன் நியமிக்கப்பட்டுள்ளார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர் இலங்கை, இந்திய சித்த வைத்திய பட்டப் பரீட்சைகளிலும் தேர்ச்சி பெற்றவர்.

அண்மையில் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பியின் இடத்துக்கே டாக்டர் வாமதேவன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் (க)

## பண்டிதமணி நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஏழாவது நினைவு தினம் நேற்றாகும்.

பண்டிதமணி அவர்களின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தினம் எதிர்வரும் 27 ஆம் திகதி கொண்டாடப்பட இருக்கிறது

இந்நிகழ்வுகளை ஒட்டி மாணவர்களிடையே பேச்சுப் போட்டியையும், பாடசாலை மாணவர்கள் அல்லாதவர்களிடையே கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவும், பண்டிதமணி அவர்களது நூல் ஒன்றினை வெளியிடுவதற்கும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை ஏற்பாடு செய்து வருகின்றது. (ஓ)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 14

எதிர்வரும் வியாழக்கிழமை (18-3-93) பருத்தித்துறையிலிருந்து புறப்படும் கப்பலில் நோயாளர்கள் கொழும்புக்குக் கூட்டிச்செல்லப்படவுள்ளனர்.

கப்பலில் கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் வியாழக்கிழமை காலை ஏழு மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சமூகமளிக்கவேண்டும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ)

## ஆலயங்களில்

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா 24 ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். (க)

## குருநகரில் வயிற்றோட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

குருநகர் பகுதியில் சில இடங்களில் வயிற்றோட்ட நோய் பரவி வருவதாக குருநகர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

திருநகர், இராஜசிங்கம் வீதி போன்ற பகுதிகளில் இருந்து அதிக எண்ணிக்கையானோர் வயிற்றோட்ட நோயுடன் சிகிச்சைக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பெப்ரவரி மாதத்தில் 50 பேரும் — இந்த மாதத்தில் இதுவரை 42 பேரும் குருநகர் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு வந்ததாகவும்—

மேற்படி விவரங்கள் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## பண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் ஆரிய திராவிட பாஷா பிருத்திச் சங்கத்தினர் நடத்தி வரும் பாலபண்டித, பிரவேச பண்டித வகுப்புகள் மருதனார்மடக் கல்விக் கோட்டத்தில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

வகுப்புகளின் தொடக்க விழா இராமநாதன் கல்லூரியில் நாளை பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது இத்தொடக்க விழாவில் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர், கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆ. தி பா. சங்கச் செயற்குழுவினர் ஆகியோர் கலந்து கொள்வர்.

பண்டித வகுப்புகளில் பயில்வதற்குப் பதிவு செய்தவர்களும், பயில விருப்புவோரும் தொடக்க விழாவுக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம் மார்ச் 14

எதிர்வரும் 15, 16 ஆம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை உரும்பராய் பிரதேச அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் வைத்து நிறுத்தல், அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெறும்.

உரும்பராய் பிரதேச சபையின் எல்லையினுள் இருக்கும் வர்த்தகர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-163)

## மன்னாரிலிருந்து வடக்கே விசேட படகுச் சேவை

### செஞ்சிலுவை நடத்தியது

யாழ்ப்பாணம், மார்ச் 14

மன்னார் நகரில் இருந்து வடக்கே வரமுடியாத நிலையில் இருந்த மக்களுக்காக விசேட படகுச் சேவை ஒன்று நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவால் நடத்தப்பட்டது.

மன்னார் நகரில் இருந்து விடத்தல் தீவுக்கு நடத்தப்பட்டு வந்த படகுச் சேவையை படையினர் கடந்த ஒரு மாதத்துக்கு மேல் தடை செய்திருந்தனர்.

இதன் காரணமாக மன்னார் நகரில் இருந்து வெளியேற முடியாத நிலையிலும், மன்னார் நகருக்குள் செல்ல முடியாத நிலையிலும் இருந்த மக்களுக்காக இந்த விசேட படகுச் சேவை நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனும், அரச தரப்பு பிரதிநிதிகளுடனும் செஞ்சிலுவைச் சங்கம் பேச்சுக்கள் நடத்தி இணக்க நிலையை ஏற்படுத்திய பின்னர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் இப்படகுச் சேவை நடத்தப்பட்டது. (த-3)

## ஹெலஉறுமயவின் நோக்கம்; சு.க. எம்.பி. தரும் விளக்கம்

கொழும்பு. மார்ச் 14

சமஷ்டி அரசமைப்பில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதே ஹெல உறுமய அணியின் பிரதான நோக்கமாகும்.

"ஹெல உறுமய" தலைவரும் களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியுமான திலக் கருணாரத்தின காலி விளையாட்டரங்கில் இடம்பெற்ற "ஹெல உறுமய" பொதுக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

சமஷ்டி அரசமைப்பு முறைக்கு எதிராகச் செயல்படுவதற்குரிய காலம் வந்துவிட்டது என்று இன்னொரு சுதந்திரக் கட்சி எம். பி. எஸ். எல். குணசேகரா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சிறந்த வழி சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதே என சுதந்திரக்கட்சி எம். பி. எல். ஏ. பி. பெரேரா தெரிவித்தார்.

காலி மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. ஹேமகுமார நாணயக்கார கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

### ராஜீவின் மகள் வந்துள்ள சமயம்

## போபாலில் குண்டு வெடித்து எட்டுப் பேர் படுகாயம்!

மத்திய பிரதேச தலைநகர் போபாலில் நேற்று சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் 8 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் அறுவர் ஒப்பந்தம் ரோந்து வந்துகொண்டிருந்த பொலிஸார் என்று கூறப்படுகிறது.

காலஞ்சென்ற பிரதமர் ராஜிவ் காந்தியின் மகள் பிரியங்கா போபால் நகருக்கு வருகை தந்திருக்கும் சமயம் இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றிருக்கிறது என்று செய்திகள் தெரிவித்தன. (ஒ)

## மத்திய இணை அமைச்சர் ஜெயலலிதாவுடன் பேச்சு

இந்திய மத்திய அரசின் பணியாளர் துறை இணை அமைச்சர் திருமதி மார்காட் ஆல்வா நேற்று சென்னையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இருவரும் சுமார் ஒன்றரை மணி நேரம் பேச்சு நடத்தியதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

பேச்சு விவரம் ஏதும் நேற்றிரவு வரை வெளியிடப்படவில்லை. (ஒ)

## படையினருக்கு எதிராக துரித சட்ட நடவடிக்கை

### மனித உரிமை குழு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள படைச் சிப்பாய்களுக்கும், பொலிஸாருக்கும் எதிரான சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வலியுறுத்தி உள்ளது

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற பிரஸ்தாப ஆணைக்குழுவின் மாநாட்டிலேயே இது குறித்து வற்புறுத்தப்பட்டது

இத் தகவலை ஐ நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் ஸ்ரீலங்கா அரச சார்பில் பங்குபற்றிய திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

ஆட்கள் காணாமற் போவது குறித்தும் ஆணைக்குழு கூட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது (அ-த-6)

## பட்டயப் பயிற்சிக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கைப் பொறியியலாளர் சங்கத்தின் பட்டயப் பொறியியலாளர் அங்கத்துவம் பெறுவதற்கான பயிற்சியை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் குலின்ஸ் நிறுவனமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்தில் குடிசார் பொறியியலாளராகப் பணிபுரிபவர்கள் தங்கள் தொழிலில் பட்டயம் பெறுவதற்குரிய "டினசன்" பயிற்சியை குலின்ஸ் நிறுவனத்தில் மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருந்தது

இலங்கைப் பொறியியலாளர் சங்கத்தின் பயிற்சிக்கான அனுமதி தமிழீழப் பிரதேசத்தில் முதல் தடவையாக "குலின்ஸ்" நிறுவனத்துக்கே கிடைத்திருக்கிறது. (அ)

## விநியோகம்

மந்திகை, மார்ச் 14

அண்மையில் 'குமணை' கப்பலில் எடுத்து வரப்பட்டு, வடமராட்சி பகுதியில் விநியோகிக்கப்பட்ட தபால்களில் பெரும்பாலும் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டுத் தபால்களே அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பாய் அனர்த்தங்களை ராவ் நேரில் பார்த்தார்

பம்பாய், மார்ச் 14

பம்பாய் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை நேரில் ஆராயும் பொருட்டு பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்று அங்கு சென்றிருந்தார்.

பிரதமருடன் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், மாநில ஆளுநர் பி. ஸி. அலெக்ஸாண்டர், முதலமைச்சர் சரத்பவார் ஆகியோரும் சென்றிருந்தனர்.

முதலில் குண்டு வெடித்த பங்கு மார்க்கெட் கட்டடத்துக்குச் சென்று பிரதமர் நரசிம்மராவ் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட அனர்த்தங்களை பார்வையிட்டார்.

குண்டு வெடிப்புச் சம்பவங்களில் படுகாயமடைந்த நிலையில் பம்பாய் நகரில் பல ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருப்போரையும் பிரதமர் பார்வையிட்டார். (ஒ)

# உலகத் தலைவர்கள் பலர் அனுதாபம்; கண்டனம்

புதுடில்லி, மார்ச் 14

பம்பாயில் நிகழ்ந்துள்ள மோசமான குண்டு வெடிப்புக்கள் குறித்து உலகத் தலைவர்கள் பலர் அனுதாபத்தையும், கண்டனத்தையும் அதிர்ச்சியையும் வெளியிட்டுள்ளனர்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து பிரமுகர்கள் பலரும் தமது அனுதாபங்களை தெரிவித்த வண்ணம் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக இந்தியாவுக்கு சகல உதவிகளையும் வழங்க தயாராக இருப்பதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

என்ன உதவி தேவை என்பதை இந்திய அரசிடம் கேட்டறியுமாறு பிரிட்டிஷ் பிரதமர் புதுடில்லியிலுள்ள தமது தூதரக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, பிரதமர் நரசிம்மராவ் ஆகியோருக்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அனுதாபச் செய்திகளை அனுப்பியுள்ளார்.

பம்பாயில் ஏற்பட்ட உயிர், உடைமைச் சேதங்கள் குறித்து தாம் பெரிதும் கவலை அடைவதாகவும், இது குறித்து தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரேமதாஸா அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-க-6)

# முஸ்லிம் தீவிரவாதி கைது

புதுடில்லி, மார்ச் 14

பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை நேற்று பொலிஸார் கைது செய்தனர் என்று யு. எஸ் ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கைதான நபர் காஷ்மீர் பிரிவினைவாத இயக்கத்தைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாதி என்று கூறப்படுகிறது.

பிரஸ்தாப நபர் பம்பாய் சொகுசு ஹோட்டல் ஒன்றில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய போது, ஹோட்டல் ஊழியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அவருடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருப்படும் மேலும் ஐந்து காஷ்மீர் தீவிரவாதிகளும் ஈரானுடன் தொடர்புடையவரான இந்தியர் ஒருவரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிய வந்தது.

இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நாடு முழுவதும் பொலிஸார் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்; என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## அவசரகாலச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் வைத்து வாக்குறுதி அளித்திருக்கிறது.

மேற்படி ஆணைக்குழுக் கூட்டத்தில் அரசாங்க சார்பில் கலந்து கொண்ட ஜனாதிபதியின் ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் வெளியிட்ட அறிக்கையிலேயே ஐ. நாவுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது குறித்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் யுத்தம் நடைபெறும் வரை மனித உரிமை மீறல்கள் நிகழ்வதை முற்றாகத் தவிர்ப்பது கடினம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளை ஐ. நா. பாராட்டியதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-6)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சிவநாதன்

(பெற்றோலியம் கூட்டுத்தாபனம்)

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த ம சிவநாதன் அகாலமரணமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் — தங்கம்மா ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், ஆறுமுகம் (ஆசிரியர், சரணவாய் தாமோதர வித்தியாலயம்), கணேசமூர்த்தி (நெதர்லாந்து), கமலநாதன் (பிரான்ஸ்), இந்திராணி, யோகநாதன் (சாமுவேல் அன்ட் கொம்பனி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், இ கணேசலிங்கத்தின் (கிராம அலுவலர், அச்சுவேலி தெற்கு) மைத்துனரும், திரு - திருமதி வி. அம்பலவாணர் ஆகியோரது பெறாமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (13-03-93) நண்பகல் அச்சுவேலி தெற்கில் இடம்பெற்றன.

தகவல்:
அச்சுவேலி தெற்கு. ம. ஆறுமுகம்

(24841)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பம்பாய் குண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களா?

கமிஷனர்: நாங்கள் ஒருவரை விசாரணைக்காக எமது காவலில் வைத்திருக்கிறோம்.

கேள்வி: அவர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்று கூறுவீர்களா?

கமிஷனர்: சந்தேக நபர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்று நான் குறிப்பிடவிரும்பவில்லை.

கேள்வி: விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் ஒருவர் இது தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சில செய்திகள் கூறுகின்றனவே?

கமிஷனர்: ஆம் இது தொடர்பாக நாம் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த ஒருவரை விசாரணைக்காகத் தடுத்து வைத்திருக்கிறோம். அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தையோ அல்லது வேறு அமைப்புகள் எதனையுமோ சார்ந்தவர் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக இறுதி வரை நாம் அவரை விசாரணை செய்ய இருக்கிறோம். அவர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்பதை அந்த விசாரணையின் பின்னர்—சற்றுத் தாமதமாகத்தான் — நாம் தெரிவிக்கக் கூடியதாக இருக்கும்

கேள்வி: இந்த நபர் ஸ்ரீலங்காவைச் சேர்ந்தவர்தான் என்பதை நீங்கள் எப்படி அடையாளம் கண்டீர்கள்?

கமிஷனர்: மன்னிக்கவும். அது பற்றிய தகவலை நான் இப்போது வெளியிட முடியாது.

கேள்வி; இது தொடர்பாக மேலும் சிலரை அடுத்து வரும் மணித்தியாலங்களில் நீங்கள் கைது செய்வீர்களா?

கமிஷனர். ஆம்

கேள்வி: அப்படிக் கைது செய்யப்படுபவர்களும் ஸ்ரீலங்காவைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களா?

கமிஷனர்: அதனை நான் இப்போது கூறமுடியாது விசாரணையில் அவர்கள் பற்றியும் ஒரு மனம் உள்ளது.

விசாரணையில் எல்லா வாய்ப்புகளையும் நாம் ஆராய வேண்டியிருக்கும்.

இது சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்களை மட்டும் நாம் விசாரணைக்குக் கொண்டு செல்வோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவது பொருத்தமாக இருக்காது.

நாம் திறந்த மனதுடன் எல்லாவாய்ப்புகளையும் ஆராய வேண்டும் — என்றார்.

பொலிஸ் கமிஷனர் வெளியிட்ட தகவல்கள் குறித்து கருத்து வெளியிடுகையில் பி. பி. ஸி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்ததாவது:-

பொலிஸாருக்கு இப்போது கிடைத்திருப்பது சூழ்நிலை, சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்ட சாட்சியங்கள் மட்டுமே

எனவே இந்த நிலையில் தடுத்து வைக்கப்பட்டோரின் அடையாளம் தொடர்பான விவரங்கள் பதில் செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை.

இதனால்தான் இப்போதைக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோரின் விவரங்களை வெளியிடாமல் அவர்கள் தவிர்க்கிறார்கள். — என்றார். (உ-5)

## எல்லைகளைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குப் பகுதிகள் வடக்கு கிழக்குப் பகுதிக்கு வெளியே வேறு மாகாணங்களுடன் இணைக்கப்படலாம்.

ஆனால் மாகாண எல்லைகளை மாற்றி அமைத்தாலும் அதிகாரங்களைப் பகிர்வு செய்வது தொடர்பான பிரச்சினை தீர்ந்து விடாது — என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (அ-5)

## வடக்கு – கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரச்சினையில் சிங்களவர், தமிழர் ஆகிய இருதரப்பினருக்கும் இடையே நீண்ட காலமாக நிலவும் கருத்து வேற்றுமைகளை தமது அறிக்கையில் தமிழ் எம். பிக்கள் வெளியிடவுள்ளனர்.

### தோற்றுவிட்டது

தமிழ் தரப்பினருக்கும், பெரும்பான்மை சிங்களக்கட்சிகளுக்கும் இடையே ஒருமித்த கருத்துக்களை ஏற்படுத்தும் முயற்சியில் தெரிவுக்குழு தோற்றுவிட்டது. இது விடுதலைப் புலிகளுக்குத்தான் சாதகமாக அமையும். தெரிவுக்குழு தோற்றுவிட்டது என்பதைக் காட்டி அவர்கள் ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவார்கள்.

வடக்கு கிழக்கைப் பிரிப்பது என்று பிரேமதாசா முடிவு செய்தால் புலிகளுடன் போராட்டம் மேலும் தீவிரமாகத் தொடரும். இதனால் நாட்டுக்குப் பெரும் பொருட் சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்படும்.

எனவே பிரேமதாசா இரண்டு பகுதிகளையும் இணைப்பது பற்றி தீவிரமாக ஆராய வேண்டும்

ஆனால் அதற்கு சிங்களவரிடையே அவருக்குத் தீவிர எதிர்ப்பு ஏற்படும். அதை அவர் விரும்பமாட்டார்.

தெரிவுக் குழுவின் முகவுகள் செயற்படுத்தப்பட்டால் போர் தீவிரமாகும். இந்தப் போரில் தாம் வெற்றி பெறுவார்கள் என்று இராணுவத்தினர் நம்புகின்றனர்.

1994 இறுதியில் அல்லது 1995 இல் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றை எதிர்நோக்கி, வாக்காளர்களைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டிய நிலையில் ஒரு தெளிவற்ற நிலையே தொடரும்.

தெரிவுக் குழுவின் மீது ஜனாதிபதி பிரேமதாசா அதிக நம்பிக்கை வைத்திருந்தார். அமைதியை ஏற்படுத்தும் நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்று உதவி வழங்கும் நாடுகள் கேட்ட போதெல்லாம் அவர் இந்தத் தெரிவுக் குழுவையே பதிலாகக் காட்டி வந்தார். இப்போது தெரிவுக்குழு தோல்வி கண்டுவிட்ட நிலையில் அவர் மாற்றுவழிகளைக் கண்டறிய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. — இவ்வாறு அந்தக் கண்[illegible] கப்பட்[illegible] (அ-5)

## சென்னையில் மூவர் கைது

சென்னை, மார்ச் 14

காங்கிரஸ் எம்.எல் ஏயான பீற்றர் அல்போன்ஸ் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்று சென்னையில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் எழும்பூர் தலைமை மெட்ரோ பொலிட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மூவரையும் 15 நாட்கள் காவலில் வைக்கும் படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். (ஒ)


திருகோணமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்களின் வளர்ச்சிக்காக

திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்களும் யாழ். மாவட்டக் கலைஞர்களும் இணைந்து வழங்கும்

நவாலியூர் சி. என். செல்லத்துரையின்

தாயக மண்

நாடகம்

[சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் ஆதரவில்]

காலம்: 27 - 03 - 1993 பி. ப. 3-30 மணி

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

அன்பளிப்பு : ரூபா 100/-, 50/-, 25/-, 15/-

(24842)



யாழ்ப்பாணம் கலட்டி எச்சாட்டி

மகாமாரியம்பாள் தேவஸ்தானம்

பாராட்டு விழா

தேவஸ்தானத்தில் 33 நாட்கள் இராமாயணத்தொடர் சொற்பொழிவாற்றிய

ஞானபானு இ. ஜெயராஜ் அவர்களுக்கு பாராட்டுவிழா



இன்று இரவு 7-30 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும் இந்நிழ்வின்போது ஞானபானு இ. ஜெயராஜ் அவர்களுக்குஆலய பரிபாலன சபை பொற்கிரீடம் சூட்டி, பொன்னாடை போர்த்தி, தங்கப்பதக்கம், மலர் மாலைகள் அணிவித்து பாராட்டிக் கௌரவிக்கவிருக்கிறது.

இராமாயணத் தொடர் சொற்பொழிவைக் கேட்டு, மகிழ்ந்து, இன்புற்று அமைந்த அனைவரையும் இவ்விழாவில் கலந்து கொள்ள வருமாறு ஆலய பரிபாலன சபையின் சார்பில் வரவேற்கின்றோம்

தலைவர்: திரு. வெ. பொ. பாலசிங்கம் (யாழ். நகர முதன்மைப் பணிப்பாளரும், ஆணையாளரும்)

கௌரவ அழைப்பாளர்: திருமதி பத்தினியம்மாள் திலகநாயகம்போல் (மேலதிக அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்)

பாராட்டுரைகள்:

- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா எம். ஏ.
- எஸ். சிவராமலிங்கபிள்ளை பி. ஏ. (முன்னாள் உப அதிபர், யாழ். இந்து)
- பேராசிரியர் எஸ் சண்முகதாஸ் எம். ஏ. (தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
- திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ.

பாராட்டுவிழாவைத் தொடர்ந்து பட்டிமண்டபம் இடம்பெறும்

பட்டி மண்டபம்

நடுவர்: கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர் - அகில இலங்கைக் கம்பன் கழகம்)

பொருள்: "இராமனுக்கு பெரிதும் பெருமை சேர்ப்பது, அவனது இல்லா? வில்லா? சொல்லா?"

| இல்லே! | வில்லே! | சொல்லே! |
|---|---|---|
| ஏ. ரி. பொன்னுத்துரை | இரா செல்வவடிவேல் | திரு எஸ் சிவலிங்கராஜா எம்.ஏ. |
| திரு. த. சிவகுமாரன் | திரு. க. குமாரதாசன் | திரு. ஆறு திருமுருகன் |
| செல்வன் ச. மணிமாறன் | செல்வன் க. ஜெயநிதி | செல்வன் வ. பிரசாந்தன் |

— பரிபாலன சபை (கலட்டி எச்சாட்டி மகா மாரியம்பாள் தேவஸ்தானம்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org